திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. போன்ற பரீட்சைகளில் முதல் மார்க், இரண்டாவது மார்க் வாங்குகிறவர்களுக்குத் தினத் தந்தி போன்ற பத்திரிகைகளில் எல்லாம் அந்த மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பரிசுத் தொகை எல்லாம் கொடுக்கிறார்கள். முன்னாள் சபாநாயகர் பெரியவர் திரு. ஆதித்தனார் அவர்கள் இருக்கும்போது சடுகுடு விளையாட்டை ஊக்குவித்தார்கள். அதேபோல் தமிழ்நாடு அளவிலும் எந்த மாணவர்கள் நல்ல முறையில் சடுகுடு விளையாடுகிறார்களோ அவர்களுக்குப் பரிசு கொடுக்கும் வகையில் அவர்களுடைய வாரிசாக இருக்கின்ற திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களை அரசு அறிவுறுத்துமா ?

அது மட்டும் அல்ல, பெண்கள் இப்போது சடுகுடு விளையாடுவதை விட்டுவிட்டார்கள். சடுகுடு விளையாட்டை விளையாடினால் பெண்களுக்கு உடம்புக்கு ரொம்பவும் நல்லது. ஆகவே, பணக்கார குடும்பம் என்ற படத்தில் சரோஜாதேவி அவர்கள் சடுகுடு, சடுகுடு, சடுகுடு என்று பிரமாதமாக விளையாடினார்கள். அந்தப் படத்தைப் பள்ளிகளில் குழந்தைகளுக்குப் போட்டுக் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்./

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சடுகுடு விளையாட்டுப் பள்ளிகளிலே சொல்லித் தரப்படுகிறது. மாணவ, மாணவியர்கள் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

நலிந்த தமிழ்ப் புலவர்களுக்கும் உதவித்தொகை

725—(*வினா எண். 6091)—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழைத் தமிழ் புலவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) உதவித் தொகையைக் கூட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1984–85 நிதி யாண்டு வரையில் 214 நலிந்த தமிழறிஞர்கள் பயன்பெற்றனர்.

(ஆ) இல்லை.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு எந்த அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது ? தற்போது வழங்கப்படு கின்ற உதவித் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, முதலிலே ரூ. 100 தரப்பட்டது. இப்போது அதை உயர்த்தி ரூ. 250 ஆகத் தந்து கொண்டிருக் கிறோம்.

(முற்பகல் 9–50)

திருமதி. பா. வளர்மதி : தலைவர் அவர்களே, ஏழைத் தமிழ்ப் புலவர்களை ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் சிறப்பு ஊழியர்களாக நியமித்து அங்கு தமிழைக் கற்றுத் தருவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, இங்கே தமிழ் அறிஞர்களாக வறுமையில் வாடுகின்ற புலவர்களுக்கு 58 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்கின்ற அடிப் படையில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. பள்ளி களில் பாடம் சொல்லித் தருவதற்கு நல்ல இளைஞர்கள் நிறைய பேர்கள், புலவர்கள் இருக்கிறார்கள்.

தனியார் பள்ளிகளில் தமிழ் பயிற்றுமொழி.

726—(*வினா எண் 6571)—திரு. கு. சுப்பராயன் : மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசின் கல்வி மானியம் பெறும் தனியார் பள்ளிகள், தாங்கள் நடத்தும் பாடத் திட்டங்களில் 75 சதவீதம் தமிழ் பயிற்சி மொழி வகுப்புகள் நடத்த வேண்டும் என்று உத்தரவிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, தமிழ் பயிற்று மொழி என்பதைக் கொள்கையாகக் கொண்ட இந்த அரசினு டைய கல்வி மானியத்தைப் பெறுகின்ற தனியார்ப் பள்ளிகளில் தமிழ்ப் பயிற்று மொழி முறை இல்லாமல் இருப்பதால், தமிழ்ப் பயிற்று மொழி இல்லாத பள்ளிகளுக்கு அரசு மானியத்தைக் கொடுக்காது என்று உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.